**இழப்பீடுகளுக்கான அலுவலகம் - 2021**

**---------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

---------------------

### 1.1. அபிப்பிராயம்

-----------------

இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புகள் மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிராகரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

அலுவலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2. அபிப்பிராயத்திற்கான அடிப்படை

--------------------------------------

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3. நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---------------------------------------------------------------------------------------------------

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அலுவலகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அலுவலகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அலுவலகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அலுவலகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கல்வி நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4. கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்வது எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோளாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ் கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்கு செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீட்டு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றை கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அலுவலகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அலுவலகத்திற்குள்ள ஆற்றல் தொடர்பில் குற்ப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருன்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது

அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாக காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அலுவலகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதினை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அலுவலகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள், மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக செய்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- அலுவலகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,
- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்க பூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (இ) இலங்கை சனநாயக சேசலிச குடியரசின் நிதி பிரமாணம் | | | |
| (i.) நிதி பிரமாணம் 715 (3) | களஞ்சிய பொறுப்பாளர்கள் களஞ்சிய பொருட்கள் கையேற்பதற்கு அதிகாரமளிக்கும் களஞ்சியசாலை | களஞ்சியசாலையின் பொருட்கள் முறையான மற்றும் பாதுகாப்பாக எதிர்காலத்தில் பேணிச் செல்வதற்கு அனைத்து | களஞ்சிய பொறுப்பாளர்கள் களஞ்சிய பொருட்கள் கையேற்பதற்கு அதிகாரமளிக்கும் |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர்கள், களஞ்சியசாலையில் களஞ்சிய பொருட்கள் இட்டு வைப்பதற்காக போதுமான மற்றும் திருப்திகரமான இடவசதி உள்ளமை குறித்து திருப்தியடைய வேண்டும். எனினும் நிறுவனத்தின் இருப்பு பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு முறையான இடமொன்று இல்லாமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | நடவடிக்கைகளும் எடுக்கப்படும். | களஞ்சியசாலை உத்தியோகத்தர்கள், களஞ்சியத்தில் பொருட்களை இட்டு வைப்பது தொடர்பாக நிதி பிரமாணம் 715(3) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii.) நிதி பிரமாணம் 751 (5) | சீர்கெடுதல் மற்றும் பாழாக்கல் காரணமாக இழப்பு ஏற்படுவதனை தவிர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு பொருட்களின் பாதுகாப்பிற்காக போதுமான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்கு அமைவற்று நடவடிக்கை எடுக்கப்பட்டமையினால் பெறுமதி ரூபா 138,600 ஆன பொருள் உறுப்படிகள் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலையில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | நிறுவனத்தில் உள்ளக ரீதியில் நியமிக்கப்பட்ட முறையாக குழுவொன்றின் ஊடாக இந்த உறுப்படிகள் முறையாக அடையாளப்படுத்தி அழிப்பதற்கு அல்லது சிதைந்த பெறுமதியாக விற்கப்பட்டு ஏதும் பணத்தொகையொன்று பெற்றுக் கொள்வதற்கு முடியுமெனில் அந் நடவடிக்கை பின்பற்றப்பட்டு முறையாக பொருட்கள் கைதவிர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | நிதி பிரமாணம் 751(5) பிரகாரம் சீர்கெடுதல் மற்றும் பாழாக்கல் காரணமாக இழப்பு ஏற்படுவதனை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு பொருட்களின் பாதுகாப்பிற்காக போதுமான ஒழுங்குகள் மேற்கொள்ளல் வேண்டும். |
| (iii.) நிதி பிரமாணம் 770 (4) | நிறுவனத்திற்கு சொந்தமாக முச்சக்கர வண்டியானது கடல் காற்று வீசுகின்றமையினால் சிதைந்துள்ளதுடன் 02 ஆண்டுகள் காலம் தொடக்கம் இயங்காது காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | இன்னுமாக பழுதுபார்த்தல் பொருளாதார ரீதீயாக பயனுறுமிக்கதா என்று பகுப்பாய்வு செய்து அவ்வாறு செய்வது பயனுறுதிமிக்கது இல்லையெனில் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் கைதவிர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | கைதவிர்ப்பு செய்ய வேண்டிய பயன்படுத்த முடியாத வாகனங்கள் தொடர்பாக நிதி பிரமாணம் 770(4) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) 02/2018 ஆம் இலக்க மற்றும் 2018 சனவரி 24 திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் | | | |
| (i) 1 ஆம் பந்தி | செயலாற்றல் ஒப்பந்தத்தின் பிரகாரம் நிறுவனத்தில் சேவையிலுள்ள ஒட்டுமொத்த பதவியணிக்காகவும் வருடாந்த செயலாற்றல் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டிருக்க-வில்லை. | நிறுவனத்தின் நிர்வாக உத்தியோகத்தர்களுக்-காக இந்த முறைமை பயன்படுத்தப்படுகின்-துடன் நிறுவனத்தில் சேவையிலுள்ள ஒட்டுமொத்த பதவியணிக்காகவும் வருடாந்த செயலாற்றல் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இந்த முறைமையை பேணிச் செல்வதற்கு எதிர்பார்க்கின்றேன். | 02/2018 ஆம் இலக்க மற்றும் 2018 சனவரி 24 திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 1 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தின் ஒட்டுமொத்த பதவியணிக்காகவும் வருடாந்த செயலாற்றல் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட வேண்டும். |
| (ii) 4 ஆம் பந்தி | அரசாங்க சேவையில் மையமாக காணப்படுகின்ற மனிதவளம் நாட்டின் அபிவிருத்திக்காக மிகவும் வினைத்திறனாக மற்றும் ஆக்கப்பூர்வமாக ஈடுப்படுத்துவதற்காக அரச துறைக்கு சொந்தமான மனிதவளம் திட்டமிடமொன்றுடன் அபிவிருத்தி செய்தல் அத்தியாவசியமான தேவையொன்றாகும். நிறுவனத்தின் பதவியணியின் அனைவருக்கும் காணப்படுகின்ற மற்றும் காணப்பட வேண்டிய திறன்கள் இடையே வெற்றிடத்தினை நிரப்புவதற்காக தயாரிக்கப்பட வேண்டிய மனிதவள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க-வில்லை. | **அவதானிப்பு சரியானதாகும்.** எதிர்காலத்தில் மனிதவள திட்டம் தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கின்றேன். | 02/2018 ஆம் இலக்க மற்றும் 2018 சனவரி 24 திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்திற்காக மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1. நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 17,114,511 ஆன பற்றாக்குறையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 16,593,948 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 33,708,459 ஆன வீச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு கொள்கை நோக்கத்தினை செயற்படுத்தும் செலவினம், இழப்பீடு செலுத்துவதற்கான ஏனைய செலவினம், வழங்கல் மற்றும் நுகர்வுப் பொருட்களுக்கான செலவினம், காலக்கழிவு செலவினம் மற்றும் நிலையான வைப்பு பேணிச் செல்லல் செலவினம் உயர்வடைதமை பிரதான காரணங்களாக காணப்பட்டன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1. முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) இழப்பீடுகளுக்கான அலுவலகம் 2018 இன் 34 ஆம் இலக்க இழப்பீடுகளுக்கான அலுவலக சட்டத்திற்கு அமைவாக நிதி ரீதியான இழப்பீடு வழங்கல்களிலிருந்து அப்பால் சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு 07 துறைகளின் கீழ் இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டிய போதிலும் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரை அவ்வாறு இழப்பீடு மற்றும் நிதிரீதியான நிவாரணம் தவிர ஏனைய வழங்கல்கள் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் கொள்கைக்காக அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது 2021 ஆகஸ்ட் மாதம் என்பதனால் ஆண்டின் ஆரம்ப 8 மாத காலப்பகுதியினுள்ளும் தொடர்புடைய இழப்பீடு செலுத்தல்கள் தவிர ஏனைய கொள்கை செயற்படுத்துவதற்கு முடியாது போனது.<br><br>எவ்வாறாயினும், தொடர்புடைய இழப்பீடுகள் கொள்கை ஊடாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக முன்னோடி செயற்திட்டங்கள் மற்றும் ஏனைய கள வேலைத்திட்டங்கள் செயற்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | 2018 இன் 34 ஆம் இலக்க இழப்பீடுகளுக்கான அலுவலக சட்டத்திற்கு அமைவாக நிதி ரீதியான இழப்பீடு வழங்கல்களிலிருந்து அப்பால் சென்று ஏனைய வழங்கல்கள் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் இழப்பீடு செலுத்தும் செயன்முறை தொடர்பாக பரீட்சிக்கும் போது வெளிப்படுத்தப்பட்ட பிரகாரம் 03 இழப்பீட்டு முன்மொழிவு திட்டங்களின் கீழ் நிறுவனத்திற்கு இதுவரையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இழப்பீட்டு விண்ணப்பங்கள் 11,926 தொடர்பாக 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த நிறுவனத்திற்கு பெறப்பட்டுள்ள 12,325 விண்ணப்பங்களில் 2022 ஆம் ஆண்டின் முதல் காலாண்டினுள் 399 கோவைகளுக்காக ரூபா 123 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. இன்னுமாக பொது திறைச்சேரியிடமிருந்து பெறப்படுகின்ற கட்டுநிதி பயன்படுத்தப்பட்டு குறித்த இழப்பீட்டு தொகை கொடுப்பனவு செய்தல் விரைவுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | பாதீடு சரியாக தயாரித்து உரிய காலத்தில் நிதியேற்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டு இழப்பீடு செலுத்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) ஒருங்கிணைந்நத மானிய திட்டத்தின் கீழ் கடன் பெற்றுக் கொடுப்பதற்காக 04 நிதி நிறுவனங்களில் ரூபா 504.91 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 16 மில்லியன் தொழில் மற்றும் புனர்வாழ்வு கடனுக்காக இலங்கை வங்கியில் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும், 08 ஆண்டுகள் காலம் தொடக்கம் இந்த தொகை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.<br>மேலும், இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் ஊடாக எஞ்சிய 03 கடன் முன்மொழிவு திட்டங்களின் கீழ் கடன் பெற்றுக் கொடுப்பதற்கு தகைமைகள் பூர்த்தி செய்துள்ள பயனாளிகள் பரிந்துரை செய்யப்பட்டு வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், வங்கியினால் கடன் பெற்றுக் கொடுத்த அளவு குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | இந்த தொழில் மற்றும் புணர்வாழ்வு கடன் முன்மொழிவு திட்டத்தின் இலக்கு குழுவானது, துயருற்றவர்களாவதுடன் அந் நபர்களின் பாதிக்கப்பட்ட தொழிலினை புணர்வாழ்வழிப்பதே இதன் நோக்காகும். தொடர்புடைய பணத்தொகை பயன்படுத்துவதற்கு விண்ணங்கள் ஏதும் முறையாக பெறப்பட்டிராததுடன் கடன் தொகை முதிர்ச்சி பெறுவதற்கு உரிய 2023.08.14 ஆந் திகதி அது பெறப்பட்டவுடனே விரைவாக திறைச்சேரிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலக்கு குழுக்களின் நபர்களின் பாதிக்கப்பட்ட தொழில்கள் புணர்வாழ்வழிப்பதற்காக இந்த கடன் முன்மொழிவு திட்ட பணத்தினை பயன்படுத்தல் வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆக்கப்பூர்வமான சேவை மட்டத்தினை பேணிச் செல்லல் மற்றும் ஊழியர் எண்ணிக்கை தொடர்பாக காலத்திற்கேற்ற மீளாய்வொன்று மேற்கொள்வதற்கு முடியாமையின் காரணத்தினால் கணக்காய்வு திகதியாகையில் நிறுவனத்தின் பதவியணியில் 23 வெற்றிடங்கள் காணப்பட்டன. | அமைச்சரவை தீர்மாணம் மற்றும் அமைச்சின் செயலாளரின் ஆலோசனை பிரகாரம் இந்த ஆட்சேர்ப்புக்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவதற்கு நேரிட்டது. எவ்வாறாயினும் நிறுவனத்தல் தற்போது காணப்படுகின்ற தேவையின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்வதற்காக 2022.03.04 ஆந் திகதி அமைச்சின் செயலாளரிடமிருந்து எழுத்து மூலமாக அங்கீகாரம் கோரப்பட்டது. அக் கோரிக்கைக்கு பதிலாக 2022.04.02 ஆந் திகதி பணிப்பாளர், உதவி பணிப்பாளர், இழப்பீடுகளுக்காண உத்தியோகத்தர் போன்ற பதவிகளின் வெற்றிடங்கள் நிரப்புவதற்காக அமைச்சின் செயலாளரிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டது. அதன் பிரகாரம் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்வதற்காக விரைவான நடவடிக்கை எடுக்கப்படும். | ஆக்கப்பூர்வமான சேவை மட்டத்தினை பேணிச் செல்வதற்காக காலத்திற்கேற்ற மீளாய்வொன்று மேற்கொண்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |